செய்தி வெளியீடு எண்:718 நாள்:14.09.2021

**செய்தி வெளியீடு**

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், புழுதிக்குட்டை கிராமத்தில் அமைந்துள்ள ஆனைமடுவு நீர்த்தேக்கத்திலிருந்து அணை கால்வாய் பாசனப் பகுதிகளிலும், ஆற்று பாசனப் பகுதிகளிலும், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கும், நிலத்தடி நீர்மட்டம் உயருவதற்கும், ஆற்று பாசனப் பகுதிகளுக்கு 15.09.2021 முதல் 12 நாட்களுக்கு 62.16 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், 27.09.2021 அன்று முதல் வலதுபுறக் கால்வாய் பகுதி மற்றும் இடதுபுறக் கால்வாய் பாசனப் பகுதிகளுக்கு 9 நாட்களுக்கு மொத்தம் 38.88 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், சிறப்பு நனைப்பாக (Special Wetting), தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் சேலம் மாவட்டத்தில் புழுதிக்குட்டை, குறிச்சி, சின்னம்மநாயக்கன்பாளையம், கோலாத்து கோம்பை, நீர்முள்ளிக் குட்டை மற்றும் சந்திரப்பிள்ளை வலசு கிராமங்களில் உள்ள நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பொதுப்பணித்துறை**

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9